Better Health Channel

Tamil | தமிழ்

| Disability services | உடலியலாமை சேவைகள் |
|---|---|
| Across Victoria, people with a disability will receive services and support under a new national scheme. | விக்டோரியா மா நிலத்திலுள்ள உடலியலாமை உள்ளவர்களுக்கு ஒரு புதிய தேசியத் திட்டத்தின் கீழ் சேவைகளும் ஆதரவுதவிகளும் வழங்கப்படும். |
| The National Disability Insurance Scheme or NDIS replaces a complex mix of state and commonwealth programs and provides certainty of all Australians less than 65 years of age living with a disability. | மாநில அரசு மற்றும் மத்திய அரசின் சிக்கல் மிக்கத் திட்டங்களைத் 'தேசிய உடலியலாமை காப்பீட்டுத் திட்டம்' எனும் புதிய திட்டம் இடமாற்றம் செய்கிறது. இத் திட்டம் 65 வயதிற்குக் கீழ்ப்பட்ட உடலியலாமையுடன் வாழும் அனைத்து அவுஸ்திரேலியர்களுக்கும் உறுதிப்பாட்டினை அளிக்கிறது. |
| For people over 65, the Australian government runs My Aged Care, which provides a range of services to support you once the NDIS commences in your area. | 65 வயதிற்கு மேற்பட்டோருக்காக, அவுஸ்திரேலிய அரசு My Aged Care எனும் திட்டத்தை நடத்துகிறது. பல சேவைகளை உங்களுக்கு வழங்கும் இத் திட்டம் நீங்கள் வாழும் பகுதியில் NDIS திட்டம் துவங்கியதும் கிடைக்கும். |
| Until that time, the Victorian government will continue to provide some services. | அது வரைக்கும், விக்டோரிய மாநில அரசு சில சேவைகளைத் தொடர்ந்து வழங்கிவரும். |
| The NDIS aims to improve services and support to people with a disability and their carers. | உடலியலாமை உள்ளவர்களுக்கும் அவர்களது கவனிப்பாளர்களுக்குமான சேவைகளை அபிவிருத்தி செய்வதை NDIS நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| The person is at the centre of the funded supports that they need. The person will have choice and control over the supports, how they'll access supports, and how they'll manage those supports. And because it's an insurance scheme, every Australian has the | சேவைகள் தேவைப்படும் நபரை மையமாக வைத்தே நிதியுதவியுடன் கூடிய சேவைகள் இயங்கும். ஆதரவுதவிகளைத் தெரிவு செய்வதும், இந்த உதவிகளைப் பெறும் விதமும், அவற்றை நிர்வகிக்கும் விதமும் இந்த |



Disability services © Copyright State of Victoria 2017

| | |
|---|---|
| assurity that if they would require disability or they already have a disability, that the NDIS is there to give them the supports they will need to get on with their lives. | சேவைகளைப் பெறுபவரது கட்டுப்பாட்டில் இருக்கும். இது ஒரு காப்பீட்டுத் திட்டம் என்பதால், தமக்கு உடலியலாமை ஏற்பட்டால், தமது வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்திச் செல்லத் தேவைப்படும் உதவிகளை அளித்து ஆதரவாக இருப்பதற்கு NDIS திட்டம் இருக்கிறது என்ற உத்தரவாதம் ஒவ்வொரு அவுஸ்திரேலியருக்கும் இருக்கும். |
| With NDIS came choice and opportunity to do the things that he wanted to do, things like cooking classes, not just with a disability support group, cooking classes in the Jamie Oliver. | NDIS - திட்டம் நீங்கள் விரும்பும் காரியங்களைச் செய்ய உங்களுக்கு வாய்ப்பளிக்கிறது. சாதாரண சமையல் வகுப்புகள் மட்டுமல்ல - 'ஜெமி ஆலிவர்' சமையல்கலை வகுப்புகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் இருக்கும். |
| I've become very positive about everything. Some had said that my health has improved quite a, quite a large amount. | எதையும் நேர்முகமாகப் பார்க்கும் நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. என்னுடைய உடல் நலத்தில் மிக, மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. |
| How do people access the NDIS? Well there is an access criteria. So there's an age criteria, so people need to be under the age of 65. There's a residence criteria, so people need to be Australian citizens or permanent residents. And of course there's a disability criteria. So people have to have a permanent disability or a disability that's likely to be permanent, and that disability must have a significant functional impact on their daily life. | NDIS சேவைகளை அணுகுவது எப்படி? இதை அணுகுவதற்கென தகுதித் தேவைகள் உள்ளன. ஆகவே, வயதுத் தகுதியும் உண்டு. எனவே இந்த சேவைகளைப் பெற ஒருவர் 65 வயதிற்கும் கீழ்ப்பட்டவராக இருக்கவேண்டும். குடி நிலைத் தகுதியும் உண்டு. ஆகவே, நீங்கள் அவுஸ்திரேலியப் பிரசைகளாக அல்லது நிரந்தரக் குடிகளாக இருக்கவேண்டும். நிரந்தர இயலாமை குறித்த தேவைப்பாடுகளும் உள்ளன. ஆகவே, நிரந்தர இயலாமை இருக்கவேண்டிது அவசியம். அல்லது நிரந்தரமானதாக மாறக்கூடிய இயலாமை இருக்கவேண்டும். மற்றும் இந்த இயலாமை |



Disability services © Copyright State of Victoria 2017

காரணமாக உங்களது அன்றாட வாழ்க்கையின் மீது தாக்கம் ஏற்பட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

I'm a mother of five. My youngest two children both have disabilities. My daughter, Lindy, who is 22, has Downes syndrome. And my son, Josh, who is just about 17 is on the autism spectrum. And I also have a husband, had a stroke, which has left him with left-side weakness and some brain deficits. So as, it's now become an interesting household where we have multiple disabilities.

நான் ஐந்து குழந்தைகளுக்குத் தாய். என்னுடைய கடைசி இரு பிள்ளைகளுக்கும் இயலாமைகள் உள்ளன. 22 வயதாகும் என் மகள் 'லிண்டி'-க்கு 'டௌன் ஸிண்ட்ரம்' இருக்கிறது. என் மகன் 'ஜோஷ்'-க்கு 17 வயது. அவனுக்கு 'ஆடிஸம்' நோய்க்கான அறிகுறிகள் உள்ளன. எனது கணவருக்கு பாரிசவாதம் ஏற்பட்டு அவருடைய உடலின் இடது பக்கம் பலவீனம் அடைந்துள்ளது. அவருக்கு மூளைக் குறைபாடுகளும் உள்ளன. ஆகவே, பார்க்கப்போனால் எங்கள் வீட்டில் இயலாமை உள்ளவர்கள் அதிகம்.

We work on developing a plan. And the plan will have access to a whole range of supports that a person needs, personal care, any of those therapies, any of those supports that the person needs to get on and meet their goals and aspirations, and live their ordinary life. That's what the NDIS is there to provide support for.

இதற்காக நாங்கள் திட்டம் ஒன்றை உருவாக்கி வருகிறோம். தேவைப்படும் ஆதரவுதவிகளை அணுகுவதற்கு இத் திட்டம் உதவும். தமது இலக்குகளையும், தமது விருப்பங்களையும் பூர்த்தி செய்துகொள்ள ஒருவருக்குத் தேவைப்படும் தனி நபர் கவனிப்புச் சிகிச்சைகளைப் பெறவும் தமது அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்லத் தேவைப்படும் உதவிகளைப் பெறவும் இந்தத் திட்டம் உதவும். இப்படிப்பட்ட உதவிகளை வழங்கவே NDIS திட்டம் இருக்கிறது.

And he's been able to take responsibility for some of the things that he used to do that he was prevented to do, like going to the pharmacy and getting his own medication, taking Lindy down to have a swim lesson, and

முன்பு இவன் செய்து வந்த சில அலுவல்களை இப்போது இவனே செய்துகொள்கிறான். சில வேலைகளைச் செய்ய முன்பெல்லாம் இவனுக்கு அனுமதி இல்லை, ஆனால்



Disability services © Copyright State of Victoria 2017

things like that. So it's been much more like a natural family.

இப்போது அதற்கான பொறுப்பு இவன் கையில். மருந்துக் கடைக்குப் போவது, தன் மருந்துகளைத் தானே வாங்கிக் கொள்வது, 'லின்டி'-யை நீச்சல் கற்றுக்கொள்ள அழைத்துச் செல்வது போன்ற வேலைகளுக்கு இப்போது இவனே பொறுப்பு. எனவே, நாம் இயற்கயான குடும்பத்திலும் பார்க்கச் சிறப்பாகச் செயல்படுவோம்.

We know there's going to be more demand under the NDIS so we need service providers to emerge, to diversify, to go into areas that they haven't been into before because it's really important that NDIS participants have access to vibrant markets that they can choose from.

NDIS திட்டம் நம்மிடம் இருந்து அதிகம் எதிர்பார்க்கும் என்பதை நாம் அறிவோம். ஆகவே, சேவை வழங்குனர்கள் இது வரைக்கும் அவர்கள் செய்யாத புதிய விடயங்களை செய்துபார்க்க வேண்டிய தேவை இப்போது உள்ளது. NDIS திட்டத்தில் உள்ளவர்களுக்குப் பல விதமான தெரிவுகள் கொடுக்கப்பட்டால் இத் திட்டத்தில்உள்ளவர்கள் தமக்குப் பிடித்த விடயங்களைத் தெரிவு செய்துகொள்ளலாம். இது மிக முக்கியம்.

So our world's gone from a very small place where we carried a really heavy load of responsibility, it was very lonely, it was very isolated, our world's a much, much bigger place. He's become a teacher instead of a child with a disability.

முன்பெல்லாம் நமது உலகம் சிறியதாக இருந்தது. நாம் சுமக்க வேண்டிய பொறுப்புகள் ஏராளம் இருந்தன. நமது பழைய உலகம் தனித்த ஒரு உலகம். ஆனால், இப்போது நம் உலகம் மிகப் பெரியது. இப்போது இவன் இயலாமையுடைய ஒரு குழந்தையல்ல. இப்போது இவன் மற்றவர்களுக்குக் கற்றுத்தரும் அளவுக்கு இருக்கிறான்.

We're building the capacity of people with disabilities to engage in society, to engage in workforce, and to break down any of those stereotypes or barriers that can be done, to make sure that people with disability in this

சமூக வாழ்க்கையில் ஈடுபாடு கொள்ளும் திறனை இயலாமையுள்ளவர்கள் வளர்த்துக்கொள்ளவும், அவர்கள் தொழிலாளர்



Disability services © Copyright State of Victoria 2017

country have the same opportunity that all Australians have.

படையில் சேரவும், அவர்களைப் பற்றிய பழைய ஊன்றிப்போன எண்ணங்களையும் கருத்துக்களையும் உடைத்தெறியவும் எம்மால் முடிந்தவரை நாங்கள் உதவுகிறோம். எல்லா அவுஸ்திரேலியர்களுக்கும் கிடைக்கும் வாய்ப்புகள் இயலாமை உள்ளவர்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய நாங்கள் முயலுகிறோம்.

There's so many things I'd like to say to people who haven't yet experienced NDIS. It's new, it's big, it's scary because it's unknown. It's different to how things have been done in the past, but I truly believe it's better. It's better for everyone. It's about choice. It's about options. And don't be afraid of what you might lose. Start to dream about what you might gain.

இது வரை NDIS திட்டத்தைப் பற்றிய அனுபவம் இல்லாதவர்களுக்கு நான் சொல்ல விரும்பும் விடயங்கள் பல உள்ளன. இது ஒரு புதிய, பெரும் திட்டம். இது அச்சமூட்டுவதாக இருக்கும், ஏனெனில் இது யாரும் அறியாதது. இத் திட்டத்தில் கடந்த காலத்தில் இருந்ததைப்போலக் காரியங்கள் செய்யப்படுவதில்லை, ஆனாலும் இத் திட்டம் பழையதை விடச் சிறந்தது என்பது என் நம்பிக்கை. ஒவ்வொருவருக்கும் இது அதி சிறப்பானது. நீங்கள் விரும்புவதை நீங்கள் தெரிவு செய்யலாம். இத் திட்டத்தில் தெரிவுகள் ஏராளம். எதையும் இழந்துவிடுவோமோ என்று அஞ்சாதீர்கள். நீங்கள் பெறக்கூடிய பலன்களைப் பற்றி யோசியுங்கள்.



Disability services © Copyright State of Victoria 2017

Contact the National Disability Insurance Scheme if you are under 65 years of age. Contact My Aged Care if you are over 65 years of age. For more information, visit: BETTERHEALTH.vic.gov.au/disability

நீங்கள் 65 வயதிற்கும் கீழ்ப்பட்டவர் என்றால் 'தேசிய உடலியலாமைத் திட்டத்துடன் (National Disability Insurance Scheme) தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் 65 வயதிற்கும் மேற்பட்டவர் என்றால் 'My Aged Care'-உடன் தொடர்புகொள்ளுங்கள். மேலதிகத் தகவல்களுக்கு: BetterHealth.vic.gov.au/disability



Disability services © Copyright State of Victoria 2017